## வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 - 2017

---

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் II, பீ, 3 ஆம் பிரிவின் 2 ஆம் அட்டவணையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் பகுதி – 01 இன் நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சாகவிருந்த தற்போதைய சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் (Agribusinesses) விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை அதிகரித்தல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மேலும், உயர் பெறுமதியுடைய விவசாய உற்பத்தி மற்றும் பெறுமதிச் சேர்க்கைக்கான விவசாயி உற்பத்தியாளர் நிறுவனம் (Farmer Producer Organization) மற்றும் விவசாய வணிகங்களிலிருந்து ஆற்றல்மிக்க முதலீடுகளை கவர்ந்துகொள்ளுதல் மற்றும் சுற்றாடல், ஊக்குவிப்புப் படிகளை வழங்குதல் மற்றும் (அ) முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு (Investment Preparation Support); (ஆ) உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான மானியங்களை இணைத்தல் (Matching grants to producer organizations and agribusinesses) மற்றும் (இ) பகுதியளவு கடன் உத்தரவாதங்கள் (Partial credit guarantees) என்பன உள்ளடங்கலாக அத்தகைய முதலீடுகளிற்கான நிதியை அணுகுதல் என்பன வணிக ரீதியான மற்றும் ஏற்றுமதி சார்ந்த விவசாயத்தை மேம்படுத்துவதற்கு ஆதரவளிப்பதற்கான நடவடிக்கைகள் ஆகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,413.78 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 105.61 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 8,956.95 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 61.37 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக, செயற்திட்டத்தின் பயனாளிகளினால் ரூபா 6,436.40 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 44.10 மில்லியன் பங்களிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்புக்கள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 2.1 அபிப்பிராயம்

-----------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும், மற்றும்

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 09 ஆம் பிரிவால் வேண்டப்பட்டவாறு செயற்திட்ட நடவடிக்கைகளின் சுமூகமான செயற்பாட்டு நோக்கத்திற்கான செயற்திட்ட வழிகாட்டல் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 4.25 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இணைய அடிப்படை ஜீஐஎஸ் மென்பொருளொன்று (a web bases GIS software) நிதி அமைச்சின் 2002 நவம்பர் 28 இன் ஐஏஜ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி மற்றும் உபபாகங்கள் பதிவேட்டில் செயற்திட்டத்தால் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| **மூலம்** | **நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு** | | **2017 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள்** | |
|---|---|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஐடிஏ | 61.37 | 9,213.01 | 4.66 | 700 | 2.19 | 335.00 |
| பயனாளிகள் பங்களிப்பு | 44.10 | 6,620.39 | - | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 0.14 | 21.00 | 0.33 | 50 | - | - |
| **மொத்தம்** | **105.61** | **15,854.40** | **4.99** | **750** | **2.19** | **335.00** |

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம், ரூபா 750 மில்லியன் தொகை மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மொத்த ஒதுக்கீட்டில் 44.67 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 335 மில்லியன் தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக செயன்முன்னேற்றம்**

முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு, விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கான மானியங்களை இணைத்தல் மற்றும் இணைத்தல் மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் (Matching grants programme) கீழ் பயனாளிகளிற்கு கடன் வழங்குவதில் ஆர்வமுள்ள ஒன்றான நிதிசார் நிறுவனங்களின் பங்குபற்றலுடன் நிதிசார் ஆபத்தை பகிர்வதற்கான பகுதியளவு கடன் உத்தரவாதமொன்றிற்கு துணைபுரிதல் போன்ற 03 உப கூறுகளை செயற்திட்ட நடவடிக்கைகள் கொண்டிருந்தன. செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதன் செயன்முன்னேற்றம் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒதுக்கீடு செய்யப்பட்ட வளங்களை பயன்படுத்தி பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் தயாரிக்கப்பட வேண்டிய விரிவான விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டக் கடன் உத்தரவாதக் கூறின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 7.12 மில்லியன் ஒதுக்கீடு செயற்திட்டம் ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு ஆண்டு கடந்த பின்னரும் 2017 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இணைத்தல் மானியங்களை (Matching grants) வழங்குவதற்கு விவசாய வணிகங்களில் ஈடுபட்டுள்ள 04 தனியார் நிறுவனங்களை செயற்திட்டம் தெரிவுசெய்திருந்ததுடன் அந்நிறுவனங்களின் பெயரில் 2017 திசெம்பர் 31 இல் ரூபா 46.91 மில்லியன் பெறுமதியான காசோலைகள் எழுதப்பட்டு செயற்திட்டத்தின் செலவினமாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய காசோலைகள் 2018 மே 31 வரையிலும் நிறுவனங்களிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இணைத்தல் மானிய நிகழ்ச்சித்திட்டமானது உயர் வறுமை தலைக்கணிப்பீடுகள் (high poverty headcounts) மூலம் வகைப்படுத்தப்பட்டுள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை ஆகிய 07 முன்னுரிமை மாவட்டங்களிலுள்ள ஏறத்தாழ 350 விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கு ஆதரவளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இணைத்தல் மானிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு காலி மற்றும் கொழும்பு மாவட்டங்களை செயற்திட்டம் தெரிவுசெய்திருந்தது.

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

உரிய அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இஸ்ரேலிற்கு விஜயம் செய்த பொறுப்பான அமைச்சரினால் தலைமைதாங்கிய 20 நபர்களை கொண்ட குழுவிற்கான விமானப் பிரயாணம், இணைந்த படி மற்றும் ஏனைய செலவினங்கள் தொடர்பான கிரயத்தை எதிர்கொள்வதற்கு செயற்திட்டத்தால் ரூபா 11.85 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.4 வழமைக்கு மாறான செலவினங்கள்**

மீளாய்வாண்டின் போது ரூபா 15.7 மில்லியன் கிரயத்தில் 02 மோட்டார் வாகனங்களை செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்த போதிலும் அவ்வாகனங்கள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படாமல் சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டம் மோட்டார் வாகனத்தை வரிசை அமைச்சிடமிருந்து கையேற்றிருந்ததுடன் வாகனத்தை திருத்துவதற்கு ரூபா 0.51 மில்லியன் தொகையை செலவிட்டிருந்தது.

3.5 **மனித வளங்கள் முகாமைத்துவம்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டப் பதவியணியினரின் வேதனங்கள் செயற்திட்டத்தின் வெளிநாட்டு பங்களிப்பை அடிப்படையாகக்கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்தின் வெளிநாட்டுப் பங்களிப்பு ஐ.அ.டொலர் 67.37 மில்லியன் காணப்பட்ட போதிலும் செயற்திட்டப் பதவியணியினரின் வேதனங்கள் ஐ.அ.டொலர் 100 மில்லியன் வெளிநாட்டுப் பங்களிப்பை விஞ்சி செயற்திட்ட வகையின் கீழ் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, செயற்திட்டப் பதவியணியினரின் வேதனங்கள் பிழையாக தீர்மானிக்கப்பட்டு ரூபா 3.28 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.